**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி உதவித்தொகை – 2024–2025–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் நலன் அவர்களின் அறிவிப்பு – உயர்கல்வியில் சிறந்து விளங்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கரின் கல்வி இறுதி ஆண்டில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான **"பணவுறுதி ஆவணம்" (Skill Vouchers)** வழங்க **"உயர் திறன் ஊக்கத்திட்டம்"** – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(ஆதிந–3)த் துறை**

அரசாணை (நிலை) எண்.90

நாள் : 10.10.2024
குரோதி வருடம்,
புரட்டாசி மாதம், 24–ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2055.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.116, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 08.05.1992.
2. அரசாணை (நிலை) எண்.189, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 08.12.1997.
3. அரசாணை (நிலை) எண்.35, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 16.04.2012.
4. அரசாணை (நிலை) எண்.101, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 08.10.2020.

--------

**ஆணை :–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இளங்கலை, முதுகலை மற்றும் தொழில்நுட்ப படிப்புகளில் 60 % மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த பாடத்திட்டத்திற்கு ஏற்ப ரூ.1000/– முதல் ரூ.1500/– வரை பரிசுத்தொகை (Prize Money Award) வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காணும் பரிசுத்தொகை திட்டத்தில் உள்ள தொகை ரூ.3000/– முதல் ரூ.6000/– வரை உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3) இந்நிலையில், 2019-2020-ஆம் ஆண்டு வரை மேற்காணும் பரிசுத்தொகை கல்லூரிகள் மூலம் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வந்த நிலையில், 2020-2021-ஆம் ஆண்டிலிருந்து மாணாக்கருக்கு நேரடி பணப்பரிமாற்ற முறையில் (Direct Benefit Transfer – DBT) மாணாக்கர்களின் வங்கிக் கணக்கில் வழங்க, அரசாணை (நிலை) எண்.101, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 08.10.2020-இல் ஆணை வெளியிடப்பட்டது.

4) இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் நலன் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> **"உயர்கல்வியில் அதிக மதிப்பெண் பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கரை ஊக்குவிக்கும் வகையில், அம்மாணாக்கரின் கல்வி இறுதி ஆண்டில் திறன் மேம்பாடு பயிற்சிக்கான பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.41.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது".**

5) மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, இத்திட்டத்தினை **"உயர்திறன் ஊக்கத்திட்டம்"** என பெயர்மாற்றம் செய்து, உயர்கல்வியில் சிறந்து விளங்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு பரிசுத்தொகை வழங்குவதற்குப் பதிலாக, அவர்களின் வேலை வாய்ப்புக்கான திறன்களை வளர்த்து பொருளாதாரரீதியாக ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்குத் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பணவுறுதி ஆவணம் **(Skill Vouchers)** ரூ.12,000/-, ரூ15,000/- மற்றும் ரூ.25,000/- என மூன்று பிரிவுகளின் கீழ் வழங்க, ரூ.41,00,000/-ஐ (ரூபாய் நாற்பத்தோரு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இவ்வாணையின் இணைப்பில் உள்ள திட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி செயல்படுத்தவும் மற்றும் இத்தொகையினை ஆதிதிராவிடர் நல இயக்குநரின் பெயரிலான தனித்த வங்கி சேமிப்பு கணக்கில் (Single Nodal Account – SNA) வரவு வைத்து செலவினம் மேற்கொள்ளவும் அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

6) மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் -01 – ஆதிதிராவிடர் நலன் – 27 – கல்வி – மாநில செலவினங்கள் – CB ஆதிதிராவிடர் மாணாக்கருக்கான பரிசுத்தொகைத் திட்டம் – 312 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை.
>
> IFHRMS தா.தொ.கு. 2225-01-277-CB-31209

7) மேலே, பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.41,00,000/–ஐ, 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 6–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(ஆதி(ம)பந/வ.செ.பொ–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8) இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.கு. எண்.7810180 நாள் 10.10.2024 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1073 (ஆயிரத்து எழுபத்து மூன்று) (IFHRMS ASL No.2024101073).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. லட்சுமிபிரியா,**
**அரசு செயலாளர்.**

<u>பெறுநர்</u>
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–600 005
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–600 005
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–600 018
மாவட்ட ஆட்சியர், அனைத்து மாவட்டம்
மாநில கணக்காயர், சென்னை – 600 018
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 008
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை – 600 009

<u>நகல்</u>
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளரின்
தனிச் செயலர், சென்னை– 600 009.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ–1/ வ.செ.பொ–2/வ.வ.1)த்துறை, சென்னை– 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

10/10/2024
பிரிவு அலுவலர்
10/10/24

# இணைப்பு

## உயர் திறன் ஊக்கத் திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

1. **திட்டத்தின் நோக்கம் :**

உயர்கல்வியில் சிறந்து விளங்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்கள் தங்களது வேலை வாய்ப்புக்கானத் திறன்களை வளர்க்கவும், சமீபத்தில் வளர்ந்து வரும் துறைகளில் (Latest Emerging Field) அவர்களின் திறன்களை வளர்க்கும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான **"பணவுறுதி ஆவணம்"** (Skill Vouchers) வழங்க உயர் திறன் ஊக்கத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. **திட்டம் செயல்படுத்தும் முறை :**

கலை, அறிவியியல், தொழிநுட்பம், மருத்துவம், பாலிடெக்னிக், தொழில்முறை போன்ற உயர்கல்வியில் சிறந்து விளங்கும் இறுதியாண்டு மாணாக்கருக்கு நான் முதல்வன் திறன் மேம்பாட்டுத் தளத்திலோ அல்லது National Skill Development Corporation, Skill India Digital Hub, National Council for Training Academy, Tamil Nadu Skill Development Corporation மற்றும் TAHDCO போன்ற அரசு நிறுவனங்களின் வரிசை பட்டியலிலோ இடம் பெற்றிருக்கும் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவதற்கானப் பணவுறுதி ஆவணம் வழங்கப்படும்.

3. **தகுதி :**

I. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கராக இருக்க வேண்டும்.

II. போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டப் பயனாளியாக இருக்க வேண்டும்.

III. அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரிகளில் இறுதி ஆண்டில் கல்வி பயிலும் மாணாக்கராக இருக்க வேண்டும்.

IV. உயர் கல்வியின் இறுதியாண்டில் உள்ள கடைசிப் பருவத்துக்கு (last semester) முந்தையப் பருவம் வரை 60 % அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

V. இத்திட்டத்தில் பயன் பெற இணையவழியில் அல்லது இயன்முறை மூலம் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் கேட்கப்படும் விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

4. **பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை கணக்கிடும் முறை :**

I. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்களுக்கு அவர்கள் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கைப் பெறுவதற்கான பணவுறுதி ஆவணம் வழங்கப்படும்.

II. மாணாக்கர்கள் இப்பணவுறுதி ஆவணத்தை சான்றாக வைத்து அதிகப்படியாக ரூ.25,000/-க்கான பயிற்சியை பெறலாம்.

5. **விண்ணப்பிக்கும் முறை :**

I. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் பெறுவதற்கு முன், விண்ணப்பங்கள் வரவேற்பது முதல் பணவுறுதி ஆவணம் (Skill Voucher) விடுவிப்பது வரையுள்ள காலவரிசைகளை (Timelines for receiving, processing and sanction incentive to application) ஆதிதிராவிடர் நல இயக்குநர் நிர்ணயம் செய்திட வேண்டும்.

II. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டம் தொடர்பான விவரங்களையும் மற்றும் விண்ணப்பங்கள் வரவேற்பது முதல் பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) விடுவிப்பது வரையுள்ள காலவரிசைகளையும் (Timelines) பத்திரிக்கை செய்தியாக வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

III. மாணவர் தன் ஆதார் எண் அடிப்படையில் விண்ணப்பங்களை இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும். 2024-2025-ஆம் ஆண்டு மட்டும் விண்ணப்பங்கள் இணையவழியில் அல்லது இயன்முறையில் பெறப்படும். இதற்கான அறிவிப்பு ஆதிதிராவிடர் நல இயக்குநகரத்திலிருந்து வெளியிடப்படும்.

IV. மாணாக்கர்களின் கல்வி விவரங்கள் மற்றும் இத்திட்டத்திற்குத் தேவையான பிற விவரங்கள் University Management Information System இணையதளத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும்.

V. விண்ணப்பிக்கும் போது மாணாக்கரின் சென்ற ஆண்டுகளுக்கான மதிப்பெண் சான்றிதழ்களை இணைத்து அனுப்ப வேண்டும்.

VI. விண்ணப்பிப்பதற்கானக் காலக்கெடு முடிவடைந்தபின் எந்த ஒரு விண்ணப்பமும் பெறப்படாது.

6. **விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கும் முறை :**

I. அனைத்து விண்ணப்பங்களும் பெறப்பட்டபின், கீழ்காணும் பாடப்பிரிவின் ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு அதிக மதிபெண் பெறும் மாணாக்கருக்கு அவர்களின் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பணவுறுதி ஆவணம் வழங்கப்படும்.

| வ.எண். | பாடப்பிரிவுகள் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | கலை மற்றும் அறிவியல் சார்ந்த படிப்புகள் | 40% |
| 2. | தொழில்முறை படிப்புகள் | 20% |
| 3. | மருத்துவம் சார்ந்த படிப்புகள் | 15% |
| 4. | பட்டயம் அல்லது ITI மற்றும் பாலிடெக்னிக் படிப்புகள் | 15% |
| 5. | பிற படிப்புகள் | 10% |
| மொத்தம் | | 100% |

II. முதலாம் ஆண்டிலிருந்து அனைத்து ஆண்டுகளிலும் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

III. மேற்கண்ட பிரிவுகளில் பெறப்படும் விண்ணப்பங்களில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் கூடுதலாகவும், குறைவாகவும் அல்லது விண்ணப்பங்கள் பெறப்படாத நிலையில் அதனை அதிக விண்ணப்பங்கள் வரப்பெற்ற மற்ற பாடப்பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கலாம்.

IV. ஒன்றுக்கும் மேற்பட்ட மாணாக்கர் ஒரே மதிப்பெண் பெற்றிருந்தால் அவர்கள் பயில விரும்பும் பயிற்சிக்கான பாடத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

7. <u>பணவுறுதி ஆவணம் வழங்கும் முறை :</u>

I. அனைத்து விண்ணப்பங்களும் தேர்ந்தெடுத்தப்பின், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு பணவுறுதி ஆவணம் வழங்கப்படும்.

II. மாணாக்கர் மேற்காணும் பணவுறுதி ஆவணத்தைச் சான்றாக வைத்து அதிகப்படியாக 6 மாதத்திற்குள் தங்களுக்கான திறன் பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கை பெற வேண்டும்.

III. சேர்க்கை பெறப்பட்டபின், அப்பயிற்சிக்கான கட்டண விவரங்கள் மற்றும் நிறுவனத்தின் வங்கி கணக்கு விவரங்களைப் பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெற்று ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு இணையதளத்திலும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

IV. பயிற்சி நிறுவனத்தின் கட்டண விவரங்கள் மற்றும் வங்கி கணக்கு விவரங்கள் இணையதளத்தில் பெறப்பட்டவுடன், அவ்விவரங்கள் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் சரிபார்க்கப்பட்டு, மாணவரின் பயிற்சிக்கானக் கட்டணங்கள் பயிற்சி நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

V. பணவுறுதி ஆவணம் பெறப்பட்டு 6 மாதத்திற்குள் பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கை பெறாத மாணாக்கரின் பணவுறுதி ஆவணம் நிராகரிக்கப்படும். அத்தொகை பின்வரும் மாணாக்கருக்கு பயன்படுத்தப்படும்.

8. <u>பிற நிபந்தனைகள் :</u>

I. ஒரு மாணவர் இத்திட்டத்தின் கீழ் ஒருமுறை மட்டுமே பயன் பெற இயலும்.

II. தவறான தகவல்களுடன் விண்ணப்பித்து சலுகை பெறும் மாணாக்கர்கள் உடனடியாக நீக்கப்படுவர். மேலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணவுறுதி ஆவணம் நிராகரிக்கப்படும். நிராகரிக்கப்பட்ட பணவுறுதி ஆவணம், தரவரிசையில் அடுத்த நிலையில் உள்ள மாணாக்கருக்கு வழங்கப்படும்.

III. தவாறன தகவல்களினால், பயிற்சி நிறுவனத்திற்கு கட்டணங்கள் ஏதும் வழங்கப்பட்டிருப்பின், அக்கட்டணம் அரசுக்குத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

IV. சம்பந்தப்பட்டப் பயிற்சி நிறுவனங்கள் தவறானத் தகவல்கள் வழங்கப்படின், அப்பயிற்சி நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் நீக்கப்பட்டு கருப்புப் பட்டியலில் வைக்கப்படும். நீக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெறும் மாணாக்கருக்கு பணவுருதி ஆவணம் வழங்கப்படாது.

க. லட்சுமிபிரியா,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
10/10/2024
10/10/24